## அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் ஜீலை மாதம் (15.07.2020) ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம்** 2020–21 (TURIP) ன் கீழ் 02.07.2020 ஆம் நாளன்று அரசு கூடுதல் தலைமைச்செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற திட்ட அனுமதி வழங்கும் குழுவில் ரூ.200.00 இலட்சம் செலவில் கீழ்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். **(ந.கஎண்.929/2020/இ1)**

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **சிப்பம் எண்-1** | | |
| 1. | கூடலூர் நகராட்சி வார்டு எண் 7,விதைப்பண்ணை சாலை, வார்டு எண் 8,10 இராஜா கிணற்றுதெரு, வார்டு எண் 12,மேதாகாரர் தெரு, வார்டு எண் 13,கப்பாமடை சாலை, வார்டு எண் 15,கன்னிகாளிபுரம் மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் மற்றும் வார்டு எண் 19,வடக்கு ரத வீதி ஆகிய தெருக்களில் சி.எம்.பி. முறையில் தார்ச்சாலை அமைத்தல். | 4862.00 | 200.00 |
| | **மொத்தம்** | **4862.00** | **200.00** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மதிப்பீட்டு தொகை ரூ.200.00 இலட்சத்தில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி ரூ.150.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.50.00 இலட்சத்தினை நகராட்சி பங்களிப்பாக பொது நிதியிலிருந்து ஈடு செய்யலாம்.

**தீர்மான எண்.944, அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.2**

கூடலூர் நகராட்சியில் 2020–21ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் **ரூ.277.50** இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடும் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்-5ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 0 மீட்டர் முதல் 200 மீட்டர் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 92.50 |
| 2 | வார்டு எண்-5ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 200 மீட்டர் முதல் 400 மீட்டர் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 92.50 |
| 3 | வார்டு எண்-6ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 400 மீட்டர் முதல் 600 மீட்டர் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 92.50 |
| | **மொத்தம்** | **3** | **277.50** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகை ரூ.277.50 இலட்சத்திற்கும் முழு மானியமாக நிதி ஒதுக்கீடு வேண்டி கருத்துரு அனுப்பலாம்.

**தீர்மான எண்.945, அனுமதிக்கப்பட்டது**